# புறநானூற்றில் பெண்களின் வீரம்

*முனைவர் பா. வசந்தி*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
புனித ஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
வெய்க்காலிபட்டி

மலர்: 12
சிறப்பிதழ்: 1
மாதம்: மார்ச்
வருடம்: 2025
P-ISSN: 2321-788X
E-ISSN: 2582-0397
DOI: https://doi.org/10.5281/zenodo.14958671

## முன்னுரை

*சமுதாய முன்னேற்றத்திற்கு மகளிர் பங்கு முக்கியமானது. ஒவ்வொரு ஆணின் முன்னேற்றமும் ஒரு பெண்ணாலே என்பர். மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா என பாடினார் கவிமணி. சமுதாய முன்னேற ஆடவரைக் காட்டிலும் மகளிர் பங்கு முக்கியமானது. இக்கருத்திற்கு இணங்க சங்க இலக்கிய பாடல்களில் ஆடவர்கள் போரில் வெற்றி பெறுவதற்கு பெண்களும் காரணமாக இருந்துள்ளனர். இதில் புறநானூற்றில் முதல் 100 பாடல்களில் இடம்பெற்றுள்ள பெண்பாற் புலவர்கள் மற்றும் பெண்களின் வீர உணர்வும் வீரமும் பற்றி கட்டுரையில் காணலாம்.*

## மகளிர் நிலை

*பண்டைத் தமிழர் சமுதாய அளவில் நோக்கின் பெண் கற்கும் உரிமையையும் காதலனை எடுத்துரைக்கும் உரிமையையும் இல்லற தொழில் உரிமையையும் பெருமையும் புகழும் பெற்றிருந்தாள் என்பது நெற்றி திலகம் என்கிறார் சுப.மாணிக்கம். இக்கருத்திற்கு இணங்க பெண்கள் கல்வி கற்று புலவராக விளங்கியதோடு அரசர் தலைவன் மற்றும் சுற்றத்தினருக்கு வீர உணர்வினை ஊட்டுபவராகவும் விளங்கினர்.*

## புறநானூற்றில் இடம்பெற்ற பெண்பாற் புலவர்கள்

*அள்ர் நன்முல்லையார், ஒக்கூர் மாசாத்தியார், அவ்வையார், காக்கைப்பாடினியார், நச்செளசுளையார், காவற்பெண்டு, இளவெயினியார், பாரிமகளிர், புங்கண்உத்திரையார்பெருங்கோப்பெண்டு, நக்கண்ணையார், இளவெயினியார், மாறோக்கத்து நப்பசலையார், வெண்ணிகுயத்தியார், நெட்டிமையார், பக்குடுக்கை நன்கணியார், பேரெயின் முறுவலார் மாரிப் பித்தியார், தாயங்கண்ணியார் போன்ற பெண்பாற்புலவர்கள் இடம்பெற்றுள்ளனர்.*

## நக்கண்ணையார் பாடலில் வீரம்

*என்னுடைய தலைவன் கூழை உண்டு வாழும் கொடிய வறுமையினை உடையவன் என்றாலும் பகைவரைக் கண்டு அஞ்சத்தக்க தோளை உடையவன் என்றாள். இதனை*

***"என்ஐ புற்கை உண்டும் பெருந்தோ ளன்னே"***

***(பாடல் 84)***

மேலும்

***"அடிபுனை தொடுகழல் மையணல் காளைக்குஎன்***
***தொடிகழிலத் திடுதல் யான் யாய்அஞ் சுவலே***
***அதடுதோள் மயங்கல்" (பா.83)***

என்ற இரு பாடல்களின் வழி மகளிர் வீரம் நிறைந்த தலைவனை அடைதல் பெருமையாக எண்ணினர் என்பதை அறியலாம்.

**கோப்பெரு நற்கிள்ளியின் வெற்றியை காணுதல்**

என் தலைவன் கோப்பெரு நற்கிள்ளி இவ்வுரைச் சேர்ந்தவன் அல்ல. அவனுடைய நாடும் இதுவல்ல. எனவே கிள்ளியே வெற்றி பெறுவான் என்று சிலரும் இவன் வெற்றி பெற மாட்டான் என்று சிலரும் கூறும் நன்மொழிகளை கேட்டு என் கால் சிலம்பு ஒலி எழுப்ப ஓடிப்போய் என் வீட்டிலிருந்த பானை போலும் பருத்த அடிப்பாகம் உடைய பனைமரத்தின் கீழிருந்து கிள்ளி மல்லனோடு போரிட்டு வென்ற காட்சியை நான் என் கண்ணாலே கண்டேன்.

***என்னைக்கு ஊர்இஃது அன்மை யானும்***
***என்னைக்கு நாடுஇஃது அன்மை யானும்***
***ஆடு ஆடு என்ப ஒருசா ரோரே***
***ஆடன் றென்ப ஒருசா ரோரே!***
***நல்ல பல்லோர் இரு நன்மொழியே***
***அம்சிலம்பு ஒலிப்ப ஓடி எம்இல்***
***முழாஅரைப் போந்தை பொருந்திநின்று***
***யான்கண் டனன்அவன் ஆடுஆ குதலே"***

***(பாடல் 85)***

என்ற பாடலின் வாயிலாக பெண்பாற்புலவர்கள் போரினை நேரிலே கண்டும் கேட்டும் அவர்களின் வெற்றியினைப் பாடலில் குறிப்பிட்டதை அறியலாம்.

**வீரத்தாய்**

என்னுடைய இச்சிறிய வீட்டின் வாசலில் வந்து தூணைப் பிடித்தபடி நின்று கொண்டு உன் மகன் எங்கே என்று கேட்கிறாயே! என் மகன் எங்கே போய் இருக்கிறான் எனக்கே தெரியாது நான் அறியேன். ஆனால் ஒன்று நிச்சயம் நீ தெரிந்து கொள்ள வேண்டும். புலி இருந்த குகை அவனைப் பெற்ற என் வயிறு! எனவே புகழ் சிறக்க போர்க்களத்துக்குத் தான் போயிருப்பான்.

***"சிற்றில் நற்றூண் பற்றி நின் மகன்***
***யாண்டு உளனோஎன வினவுதி? என் மகன்***
***யாண்டுஉள னாயினும் அறியேன்? ஒரும்***
***புலி சேர்ந்து போகிய கல்லளை போல***
***ஈன்ற வயிறோ இதுவே தோன்றுவன்மாதோ***
***போர்க்களத்தானே!"***

என்றும், மற்றொரு பாடலில்,

***"எந்தையோடு கிடந்தோர் எம் புன்தலைப்***
***புதல்வர் இன்ன விறலும் உளகொல் நமக்கு?***
***என மூதில் பெண்டிர் கசிந்தழ நாணிக் கூற்றுக்***
***கண்ஓடிய வெருவரு பறந்தலை"***

இப்பாடலில் வீரமைந்தர் தம் தந்தையுடன் இறந்து கிடப்பதைக் கண்ட மறக்குடி மகளிர் எம் தலைவனும் மைந்தரும் வீரப் போரிட்டு மடியும் பெரும் புகழ் எம் குடிக்கும் உரியதாயிற்றோ என்று ஆனந்தக் கண்ணீர் வடிக்க அவர்தம் வீர உணர்வைக் கண்டு அவ்வீரர் உயிர் குடித்த கூற்றுவன் வெட்கிப் போய் நிற்பான் என்று கூறியுள்ளார் குடபுலவியனார்.

மேற்கூறிய இவ்விரு பாடலின் மூலம் ஒரு தாயினது வீர உணர்வினை அறியலாம்.

**அவ்வையார் பாடலில் வீர உணர்வு**

அவ்வையார், அதியமான் நெடுமானஞ்சியின் அவைக்களப் புலவராய் விளங்கினார். இவரது பாடல்கள் பெரும்பாலும் வீர உணர்வினை ஊட்டுவதாக உள்ளன.

**போர்ப்பறையின் முழக்கம்**

பொதுமன்றில் கட்டி வைக்கப்பட்டுள்ள முரசின் மேல் காற்று வந்து மோத அது அதிர்ந்து சிறிதே ஓசை உண்டாக்கினாலும் அதைப் போர்ப்பறையின் முழக்கம் என்று எண்ணிக் கொண்டு, போர்க்களம் விரைய எண்ணும் என் தலைவனும் இங்கிருக்கிறான்.

**"பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை**
**வளிபொரு தெண்கண் கேட்பின்**
**அதுபோ ரென்னும் என்னையு முளனே"**

*(பா:89)*

என்ற பாடலின் வாயிலாக முரசின் மேல் காற்று மோதினாலும் போர்பறை என்று எண்ணும் அளவுக்கு வீர உணர்வுடன் இருந்தனர் என்பதை அறியலாம்.

**போர் வலிமை**

நீ போர் செய்யப் புறப்பட்டால் உன்னை எதிர்க்க வல்ல வீரர்களும் இம்மண்ணில் இல்லை.

**"பொருநரும் உளரோ**
**நீகளம் புகினே."** *(பாடல் 90)*

இவ்வரியின் மூலம் உன்னை எதிர்க்க வல்ல வீரர்கள் இல்லை என்று கூறுவதனால் மன்னனின் வலிமையை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது.

**வீரர்களது ஆற்றல்**

விழுப்புண்பட்ட நின் வீரர்களது ஆற்றலைக் கண்டவர்கள் குருதித் தோய்ந்த அம்புகளைத் தம் அம்பறாத் தூணியிலே அடக்கிக் கொள்வர். நீயோ வெண்கடுகு புகைப்பதையும் பொருட் படுத்தாமல் விரைந்து வந்து உயிரைக் கவர்ந்து செல்வதில் எமனை ஒத்திருக்கின்றாய்.

**"மற மைந்தர் மைந்து கண்டவர்**
**புண்படுகுருதி அம்பு ஒடுக்கவும்**
**நீயே ஐயவி புகைப்பவும் தாங்காது ஒய்யென**
**உறுமுறை மரபின் புறம் நின்று உய்க்கும்**
**கூற்றத்து அனையை"** *(பாடல் 98)*

என்ற பாடலின்மூலம் வீரர்கள் ஆற்றல் மிக்கவர்களாக விளங்கியதை அறியலாம்.

**அதியமானின் படைக் கருவிகள்**

இந்தப் படைக்கலன்கள் எல்லாம் மயிற்பீலி அணிவிக்கப்பெற்று, மாலைசுட்டி, பிடிதிருத்தி, கூர்மழுங்கிக் கெடாதிருக்க நெய்வேறு தடவி, காவல்மிக்க காப்பறையில் பாதுகாப்பாக உள்ளன. ஆனால் எம்தலைவன் அதியமானிடம் உள்ள படைக்கருவிகளோ பகைவர் உடலை குத்தி கிழித்ததால் நுனி முறிந்து கொல்லன் உலைக் களத்திலேயே செப்பெனிடுவதற்காக எப்போதும் கிடக்கின்றன.

**"இவ்வே பீலிஅணிந்து மாலை சூட்டிக்**
**கண்திரள் நோன்காழ் திருத்தி நெய்யணிந்து**
**கடியுடை வியன்நக ரவ்வே அவ்வே**
**பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து**
**கொல்துறைக் குற்றி மாதோ என்றும்"**

*(பாடல் 95)*

இவ்வரிகளில் ஔவையார், அதியமானின் படைக்கருவிகள் செப்பனிடுவதற்காக எப்போதும் உலைக் களத்திலேயே கிடக்கும் என்பதால் அதியமான் போரில் வெற்றி வீரனாக திகழ்ந்தான் என்பதை பகை மன்னனிடம் வெளிப்படுத்திய பாங்கு நுட்பமானது.

**போரில் சாவதே புகழ் மரணம்**

வாரால் இறுக்கிக் கட்டப்பட்ட போர் முரசம் எழுப்புகின்ற ஒலி கேட்டுச் சென்று போர் வெல்லுதல் இனி ஏது நின்னோடு போரிட வந்தவர்கள் நின் கொடி படைக்கு ஆற்றாது சிதறி அழிந்தனர். போரிலே ஈடுபட்டு விழுப்புண் பெறாமல் கிடப்பவர் உடலை அவர் உயிர் ஆசை நீங்க தருப்பையிலே கிடத்தி, போரிலே ஈடுபட்டு வீர மரணம் அடைந்த மேலோர் போகும் புகழுலகம் சென்றடையட்டும் என்று வாளால் வெட்டி பின் அடக்கம் செய்தனர். இதனால்,

**திண்பிணி முரசம் இழுமென முழங்கச் செ ன்றமர்**
**கடத்தல் யாவது வந்தோர்**
**தார்தாங் குதலும் ஆற்றார் வெடிபட்டு**
**ஓடல் மரீஇய பீடுஇல் மன்னா**
**--------------------------------------**
**--------------------------------------**
**நீள்ழல் மறவர் செல்வுழிச் செல்கென**

வாள்போழ்ந் தடக்கலும் உய்ந்தனர் மாதோசு போரிலே ஈடுபட்டு விழுப்புண் பெறாமல் கிடப்பவர் உடலை வாளால் வெட்டிப்பின் அடக்கம் செய்தனர் என்பதால் அவர்களின் வீர உணர்வினை அறியலாம்.

## முடிவுரை

போர்க்களத்தில் ஆடவர்கள் வெற்றி வீரனாக திகழ்ந்தனர் என்று சங்ககால பாடல்கள் குறிப்பிட்டுள்ளன. இந்த ஆடவர்களின் வெற்றிக்கு அடிப்படையாக பெண்களும் பெண்பாற் புலவர்களும் காரணமாக இருந்துள்ளனர் என்பதை இக்கட்டுரை வாயிலாக அறியப்பட்டன.

## துணைநூற்பட்டியல்

1. புறநானூறு மூலமும் உரையும், 2006, ஞா. மாணிக்கவாசகன், உமா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு
2. புறநானூறு, 1985, உ.வே.சாமிநாதையர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
3. சங்க இலக்கியம் - புறநானூறு, 2009, புலவர் இரா. இளங்குமரன், கோவிலூர் மடலாயம் வெளியீடு.
4. சங்க இலக்கியம் பாட்டும் தொகையும், தொகுப்பும் பகுப்பும், 1959, எஸ். வையாபுரிப்பிள்ளை, பாரி நிலையம், சென்னை.